ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2261/52 - 2022 ජනවාරි මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.01.06
*2261/52 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி. 3/2013* (ii)

***1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டம்***

*1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் சொல்லப்பட்ட 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**ரோகித அபேகுணவர்தன,**
துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அமைச்சர்.

கொழும்பு,
*2021, திசெம்பர் 29.*

**ஒழுங்குவிதிகள்**

*1. (1)* இவ்வொழுங்கு விதிகள் 2021 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் (உயிர்காப்புத் துணைப் பொருட்களும் ஒழுங்கேற்பாடுகளும்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

*(2)* இவ்வொழுங்கு விதிகளின் நோக்கமானது, *1974* ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான சர்வதேசச் சமவாயத்தின் அத்தியாயம் III, காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான *1988* ஆம் ஆண்டின் வரைவாவணம், மற்றும் அத்தகைய வரைவாவணத் துக்குச் செய்யப்பட்ட அடுத்துப் பின்னரான ஏதேனும் திருத்தம் அத்துடன் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான சர்வதேச உயிர்காப்புத் துணைப்பொருள் (சஉது) சட்டக்கோவை என்பனவற்றுக்குப் பயன்கொடுப்பதாதல் வேண்டும்.

## பாகம் I

### இவ்வொழுங்குவிதிகளின் ஏற்புடையனவாந்தன்மை

*2.* (1) இவ்வொங்கு விதியின் உபஒழுங்குவிதிகள் (2, (3), (4) மற்றும் (5) இன் ஏற்பாடுகளுக்கமைய, இவ்வொழுங்குவிதிகள் இலங்கைக் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துடையவையும் சர்வதேசக் கடற்பயணங்களில் ஈடுபட்டுள்ளவையுமான கப்பல்களுக்கும் மற்றும் வேறெவையேனும் வெளிநாட்டுக் கப்பல்கள் இலங்கை நீர்ப்பரப்புகளில் இருக்கையில் அவற்றுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) (இல்வொழுங்குவிதிகளில் "சமவாயம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான சர்வதேசச் சமவாயம் மற்றும் 1988 ஆம் ஆண்டின் வரைவாவணம் என்பவற்றில் வேறுவகையில் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, இவ்வொழுங்குவிதிகள் பின்வருவனவற்றுக்கு ஏற்புடையனவாதலாகாது-

(அ) போர்க்கப்பல்களுக்கும் படைக்குழுவினர் கப்பல்களுக்கும் ;
(அ) 500 முழு மொத்தத் தொன்னளவுக்குக் குறைவான சரக்குக் கப்பல்களுக்கும் ;
(இ) பொறிமுறை வழிவகைகள் மூலம் உந்தப்படாத கப்பல்களுக்கும் ;
(ஈ) தொன்மையான கட்டமைப்பைக் கொண்ட மரக்கப்பல்களுக்கும் ;
(உ) வியாபாரத்தில் ஈடுபட்டிராத பொழுதுபோக்கு உலாப்படகுகளுக்கும் : அத்துடன்
(ஊ) மீன்பிடிக கலன்களுக்கும்.

(3) சமவாயத்தில் வேறுவகையில் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, இவ்வொழுங்கு விதிகளின் ஏற்பாடுகள், எந்தக் கப்பல்களின் அடிக்கட்டைகள் 1998,யூலை 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் இடப்படுகின்றனவோ அல்லது எத்தேதியன்று அல்லது எத்தேதிக்குப் பின்னர் நிர்மாணத்தில் ஒத்த கட்டத்தில் உள்ளனவோ அந்தக் கப்பல்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) ஆயிரத்துத்தொளாயிரத்துத் தொண்ணூற்றெட்டாம், ஆண்டு யூலை 1 ஆந் தேதிக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட கப்பல்கள், சமவாயத்தின் அத்தியாயம் III இன் 1 (3) மற்றும் (4) ஆம்ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறான தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(5) சமவாயத்தின் அத்தியாயம் V இல் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள், அன்டிகொஸ்டி தீவில் கேப்டெஸ்ரொசியேர்ஸிலிருந்து மேற்குப்புள்ளி வரையும் அன்டிகொஸ்டி தீவின் வடபுறத்தில் 63 ஆம் உச்சி வட்டத்திலிருந்தும், வரையப்பட்ட நேர்க்கோடொன்றாகக் கிழக்கு வரை வட அமெரிக்காவின் பெரிய ஏரிகளிலும் லோரன்ஸ் ஆற்றிலும் மட்டுமே நீர்வழிப் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற இலங்கைக் கப்பல்களுக்கு ஏற்புடையனவாதலாகாது.

*3.* (1) வழமையாகச் சர்வதேசக் கடற்பயணங்களில் ஈடுபடாததும் ஆனால் விதிவிலக்கான சூழ்நிலைகளில் தனியொரு சர்வதேசக் கடற்பயணத்தைப் பொறுப்பேற்பதற்குத் தேவைப்படுத்தப்படுவதுமான கப்பலொன்று, (இவ்வொழுங்குவிதிகளில் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் இவ்வொழுங்கு விதிகளின் தேவைப்பாடுகளுள் எவற்றிலிருந்தும் விலக்களிக்கப்படலாம்:

ஆயின், கப்பலினால் பொறுப்பேற்கப்படவுள்ள கடற்பயணத்துக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயத்தில் போதியனவாகவுள்ள காப்புத் தேவைப்பாடுகளுக்கு அத்தகைய கப்பல் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(2) புதிய வகையினவான சிறப்புக்கூறுகளைக் கொண்டுள்ள ஏதேனும் கப்பலை, பணிப்பாளர் தலைமையதிபதி, சமவாயத்தின் அத்தியாயங்கள் II-1, II-2, III மற்றும் IV என்பவற்றின் பிரயோகம் தொடர்பான ஏற்பாடுகளுள் எவையும் அத்தகைய சிறப்புக்கூறுகளின் அபிவிருத்தி பற்றிய ஆராய்ச்சியையும் சர்வதேசக் கடற்பயணங்களில் ஈடுபட்டுள்ள கப்பல்களில் அவை சேர்க்கப்படுவதனையும் பாரதூரமான முறையில் தடைசெய்யக்கூடியனவாகவுள்ள அத்தகைய ஏற்பாடுகளிலிருந்து விலக்களிக்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய கப்பல்கள், பணிப்பாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயத்தில் அவை எந்தச் சேவைக்காக உட்கருதப்படுகின்றனவோ அந்தச் சேவைக்கும் கப்பலின் ஒட்டுமொத்தக் காப்பை உறுதிப்படுத்துவதற்கும் போதியனவாகவுள்ளனவும், கப்பல் செல்ல வேண்டிய அரசுகளின் அரசாங்கங்களினால் ஏற்கத்தக்கனவாகவுள்ளனவுமான காப்புத் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(3) கடற்பயணத்தின் பாதுகாப்பளிக்கப்பட்ட தன்மையும் நிலைமைகளும் சமவாயத்தின் அத்தியாயம் III இன் குறிப்பிட்ட எவையேனும் தேவைப்பாடுகளின் பிரயோகத்தை நியாயமற்றதாக்கும் அல்லது அவசியமற்றதாக்கும் அத்தகையனவாக உள்ளனவெனப்

பணிப்பாளர் தலைமையதிபதி கருதினால், எந்தத் தனிப்பட்ட இலங்கைக் கப்பல்கள் அல்லது வகுப்பினவான இலங்கைக் கப்பல்கள் அவற்றின் கடற்பயணத்தின்போது மிகக்கிட்டிய தரையிலிருந்து 20 மைல்களுக்கு மேற்படச் செல்லாதிருக்கின்றனவோ அந்த கப்பல்களுக்கு அல்லது வகுப்பினவான இலங்கைக் கப்பல்களுக்கு அத்தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கலாம்.

(4) இவ்வொழுங்குவிதியின்கீழ் கப்பலொன்றுக்கு விலக்களிக்கின்ற பணிப்பாளர் தலைமையதிபதி, அவைபற்றிய விபரங்களையும் அவற்றுக்கான காரணங்களையும் (இவ்வொழுங்குவிதிகளில் ''ஒழுங்கமைப்பு'' எனக்குறிப்பீடு செய்யப்படும்) சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்புக்கு அறிவித்தல் வேண்டும்.

(5) சமவாயத்தின்அத்தியாயம் III இன் 20.6.2 ஆம் ஒழுங்குவிதிக்கிணங்க, பணிப்பாளர்தலைமையதிபதி, உயிர்க்காப்புப் படகுகளிலும் மீட்புப்படகுகளிலும் உள்ள எல்லா என்ஜின்களும் ஓடவேண்டுமென்ற தேவைப்பாடுகளை விட்டுக்கொடுக்கலாம்: ஆயின், சுற்றுப்புறத் தட்பவெப்பநிலை என்ஜினைத் தொடக்கி ஓடவிடுவதற்குத்தேவையான குறைந்தபட்சத் தட்பவெப்ப நிலைக்குமேல் இருத்தல் வேண்டும். 1986 யூலை 1 ஆந் தேதிக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட கப்பல்களுக்காக மட்டுமே விட்டுக்கொடுப்பொன்று அனுமதிக்கப்படலாம்.

(6) இவ்வொழுங்குவிதியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட விலக்களிப்புகள், 2022 ஆம் ஆண்டு 01 மாதம் 06 ஆந் தேதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (ஆய்வுகளும் சான்றிதழ்களும்) ஒழுங்குவிதிகளுக்கிணங்க வழங்கப்படுதல் வேண்டும்.

(7) சமவாயத்தின் அத்தியாயம் III இனால் தேவைப்படுத்தப்பட்ட அங்கீகாரம் அல்லது வகைசார்ந்த அங்கீகாரம் ஒன்று, அல்லது சமவாயத்தின் அத்தியாயம் III இனால் அனுமதிக்கப்பட்ட சமமான ஒழுங்கேற்பாடு அல்லது விட்டுக்கொடுப்பு ஒன்று பின்வருமாறிருப்பின் மட்டுமே செல்லுபடியாகும் :-

(அ) அது எழுத்திலிருப்பின் ;
(ஆ) அது பயனுக்குவரும் தேதியை அது குறித்துரைப்பின் ; அத்துடன்
(இ) அதில் குறிப்பிடப்பட்ட எவையேனும் நிபந்தனைகள் இணங்கியொழுகப்படின்.

(8) பணிப்பாளர் தலைமையதிபதி, நியாயமான அறிவித்தலைக் கொடுத்ததன்மீது, இவ்வொழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் விலக்களிப்பை, அங்கீகாரத்தை அல்லது விட்டுக்கொடுப்பை மாற்றலாம் அல்லது இல்லாதாக்கலாம்.

4. யாத்திரிகர் தொழில் போன்ற பெரும் எண்ணிக்கையினரான விசேட தொழிற்பயணிகளை ஏற்றிச்செல்வதற்காக விசேட தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பயணிக்கப்பல்களின் விடயத்தில், பணிப்பாளர் தலைமையதிபதி, சமவாயத்தின் அத்தியாயம் III இன் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதனை வலுவுறுத்துதல் செயல்முறைக்குகந்ததல்லதெனத் திருப்திப்படின், அத்தேவைப்பாடுகளிலிருந்து அத்தகைய கப்பல்களுக்கு விலக்களிக்கலாம் : ஆயின், அவை, பின்வருவனவற்றின் ஏற்பாடுகளுக்கு முழுமையாக இணங்கியொழுகுதல் வேண்டும்:-

(அ) 1971 ஆம் ஆண்டின் விசேட தொழில்பயணிக் கப்பல்கள் உடன்படிக்கையுடன் இணைக்கப்பட்ட விதிகள் ; அத்துடன்

(ஆ) 1973 ஆம் ஆண்டின் விசேட தொழில் பயணிக்கப்பல்களுக்கான இடவசதித் தேவைப்பாடுகளின் மீதான வரைவாவணத்துடன் இணைக்கப்பட்ட விதிகள்.

## பாகம் II

## உயிர்காப்புத் துணைப்பொருட்களும் ஒழுங்கேற்பாடுகளும்

5. இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையனவாகின்ற கப்பலொன்று, அதன் விவரணத்தினதான கப்பலொன்று தொடர் பாகச் சமவாயத்தின் அத்தியாயம் III இல் குறித்துரைக்கப்பட்ட உயிர்காப்புத் துணைப்பொருட்கள் மற்றும் ஒழுங்கேற்பாடுகள் பற்றிய தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

6. தப்பலிலுள்ள எல்லா உயிர்காப்புத் துணைப்பொருட்களும் ஒழுங்கேற்பாடுகளும் உயிர்காப்புத் துணைப்பொருள் சட்டக்கோவையின் ஏற்புடையற்பாலனவான தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

7. (1) கப்பலிலுள்ள எல்லா உயிர்காப்புத் துணைப்பொருட்களும் ஒழுங்கேற்பாடுகளும், ஒழுங்கமைப்பின் விதப்புரைகளுக் கிணங்க அவை சமவாயத்தின்அத்தியாயம் III இனதும் உயிர்காப்புத் துணைப்பொருள் சட்டக்கோவையினதும் தேவைப்பாடுகளுக்கு

இணங்கியொழுகுவதனை அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு அவ்விதப்புரைகளில் குறித்துரைக்கப்பட்டவற்றுக்குப் பொருளளவில் சமமான பரீட்சிப்புகளுக்கு வெற்றிகரமாக உட்பட்டுள்ளதனை உறுதிப்படுத்துவதற்குப் பரீட்சிக்கப்படுதல் வேண்டும்.

(2) கப்பலில் நிறுவப்பட்ட புதிய உயிர்காப்புத் துணைப்பொருட்கள் அல்லது ஒழுங்கேற்பாடுகள்:

(அ) ஆகக் குறைந்தது சமவாயத்தின் அத்தியாயம் III இனதும் உயிர்காப்புத் துணைப்பொருள் சட்டக் கோவையினதும் தேவைப்பாடுகளுக்குச் சமமாகவுள்ளவையும் ஒழுங்கமைப்பினால் அபிவிருத்தி செய்யப்பட்ட வழிகாட்டு நெறிகளின்அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளவையும் பரீட்சிக்கப்பட்டுள்ளனவையுமான காப்பு நியமங்களை வழங்குதல் வேண்டும்.

(ஆ) சமவாயம் அத்தியாயம் III இன் 38 ஆம் ஒழுங்குவிதிக்கிணங்கப் பொறியியல் பகுப்பாய்வு, மதிப்பீடு மற்றும் அங்கீகாரம் ஒன்றுக்கு வெற்றிகரமாக உட்பட்டிருத்தல் வேண்டும்.

(3) சமவாயத்தின் அத்தியாயம் III இனால் தேவைப்படுத்தப்பட்ட எந்த உயிர்காப்புத் துணைப்பொருட்களுக்கான விபரமான அளவுக் குறிப்பீடுகள் உயிர்காப்புத் துணைப்பொருள் சட்டக்கோவையில் உள்ளடக்கப்படவில்லையோ அந்த உயிர்காப்புத் துணைப்பொருட்கள், பணிப்பாளர் தலைமையதிபதியைத் திருப்திப்படுகின்றவாறாக இருத்தல் வேண்டும்.

8. (1) சமவாயத்தின் அத்தியாயம் III அல்லது உயிர்காப்புத் துணைப்பொருள் சட்டக்கோவை, எதுவும் வகை அங்கீகாரம் பெறவேண்டுமெனத் தேவைப்படுத்தினால், அதற்குச் சமவாயத்தின் அத்தியாயம் III இன் 4 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கிணங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வகை. அங்கீகாரமளிக்கப்படுதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியின்(1) ஆம் உப ஒழுங்குவிதியினைப் பின்பற்றி, ஓர் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பினால் (VX) அல்லது ஐக்கிய அமெரிக்க நாடுகள் கரையோரக் காவல் நிலையத்தினால், ஐக்கிய இராச்சியத்திலுள்ள கடலோரக் கரையோரக் காவல் நிலைய முகவராண்மையினால் அல்லது யப்பானின் கடலோர நிருவாகத்தினால் வழங்கப்பட்ட சாதனங்களின் அங்கீகாரங்களைப் பணிப்பாளர் தலைமையதிபதி ஏற்றுக்கொள்கின்றார் ஆயின், அங்கீகாரங்கள், முழுமையாகச் சமவாயத்தின் தேவைப்பாடுகளுக்கிணங்க இருத்தல் வேண்டும். ஐரோப்பிய ஒன்றியக் கடல்சார் சாதனப் பணிப்புரைச் சான்றுப்படுத்துகை நடவடிக்கை முறையின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள சாதனங்களையும் பணிப்பாளர் தலைமையதிபதி ஏற்றுக்கொள்வார்.

**பாகம் III**

**தொழிற்பாடுகள் தயார் நிலையும் பேணுகையும் சோதனைகளும்**

9. (1) கப்பலொன்று துறைமுகத்தை விட்டுச் செல்லுமுன்னரும் கடற்பயணத்தின் போது எல்லா நேரங்களிலும், எல்லா உயிர்காப்புத் துணைப்பொருட்களும் தொழிற்படு நிலையிலும் உடனடிப் பாவனைக்காகத் தயாராகவும் இருத்தல் வேண்டும்.

(2) ஒரு கப்பலிலுள்ள உயிர்காப்புத் துணைப்பொருட்களின் பேணுகையும், பரீட்சிப்பும், சோதனைகளும், சமவாயத்தின் அத்தியாயம் III இன் 20 ஆம் ஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்பட்டவாறாக நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(3) சமவாயத்தின் அத்தியாயம் III இன் 36 ஆம் ஒழுங்குவிதிக்கு இணங்கியொழுகுகின்ற உயிர்காப்புத் துணைப் பொருட்களின் கப்பலின் மீதான பேணுகைக்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்கப் பேணுகை நிறைவேற்றப்படுதலும் வேண்டும்.

(4) மிதமிஞ்சிய தேய்வுக்கு அல்லது பாவனைக்கு அமைந்தவையும் கிரமமாக மாற்றீடு செய்யப்படுவதற்குத் தேவையானவையுமான உயிர்காப்புத் துணைப்பொருட்களுக்காகவும் அவற்றின் ஆக்கக் கூறுகளுக்காகவும் உதிரிப்பாகங்களும் பழுதுபார்த்தற் சாதனங்களும் வழங்கப்படுதல் வேண்டும்.

(5) பணிப்பாளர் தலைமையதிபதி, உபஒழுங்குவிதி 3 இன் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுக, சமவாயத்தின் அத்தியாயம் III இன் 36 ஆம் ஒழுங்குவிதியின் தேவைப்பாடுகளை உள்ளடக்குகின்ற கப்பலிலான திட்டமிடப்பட்ட பேணுகை நிகழ்ச்சித் திட்டமொன்றை ஏற்றுக்கொள்ளலாம்.

10. (1) கப்பலொன்றிலுள்ள ஒவ்வொரு காற்றடிக்கத்தக்க உயிர்காப்புத் தெப்பமும், காற்றடிக்கத்தக்க உயிர்காப்பு மேலுறையும், கடல்சார் முறைமையும் பின்வருமாறு நன்னிலைப்படுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) 12 மாதங்களை விஞ்சாத கால இடைவெளிகளில் ஆயின், ஏதேனும் விடயத்தில் இது செயல்முறைக்குகந்ததற்றதாக இருக்குமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி இக்காலப் பகுதியை 17 மாதங்களுக்கு நீடிக்கலாம் அத்துடன்

(ஆ) அவற்றை நன்னிலைப்படுத்துவதற்குத் தகுதிவாய்ந்ததும், முறையான நன்னிலைப்படுத்தல் வசதிகளைப் பேணுகின்றதும், தகுந்த முறையில் பயிற்சியளிக்கப்பட்ட ஆளணியினரைப் பயன்படுத்துகின்றதுமான அங்கீகரிக்கப்பட்டவொரு நன்னிலைப்படுத்தல் நிலையத்தில்.

(2) இவ்வொழுங்குவிதியின் உப ஒழுங்குவிதி (1) இல் தேவைப்படுத்தப்பட்ட கடல்சார் வெளியேற்றல் முறைமைகளின் நன்னிலைப் படுத்தல் கால இடைவெளிகளுக்கு மேலதிகமாக அல்லது அவற்றோடு இணைந்து ஒவ்வொரு கடல்சார் வெளியேற்றல் முறைமையும் சுற்றுவட்ட அடிப்படையில் கப்பலிலிருந்து பிரித்தமர்த்தப்படுதல் வேண்டும். ஒவ்வொரு முறைமையும் ஆறாண்டுகளுக்கு ஆகக் குறைந்தது ஒரு தடவையேனும் பிரித்தமர்த்தப்படுதல் வேண்டும்.

(3) ஒன்பதாம் ஒழுங்குவிதியைப் பின்பற்றி புதிய மற்றும் புதுமையான காற்றடிக்கத்தகு உயிர்காப்புத் தெப்ப ஒழுங்கேற்பாடு களை அங்கீகரிக்கின்ற பணிப்பாளர் தலைமையதிபதி, பின்வரும் நிபந்தனைகளின் மீது நீடித்த சேவைக்கால இடைவெளிகளை அனுமதிக்கலாம்:-

(அ) புதிய மற்றும் புதுமையான உயிர்காப்புத் தெப்ப ஒழுங்கேற்பாடு, நீடிக்கப்பட்ட சேவைக்கால இடைவெளிகளின் போது, பரீட்சிப்பு நடவடிக்கை முறையினால் தேவைப்படுத்தப்பட்டவாறு, அதே தரத்தைப் பேணுவதனை எண்பித்துள்ளது.

(ஆ) உயிர்காப்புத் தெப்ப முறைமை, இவ்வொழுங்கு விதியின் உப ஒழுங்குவிதி (1) இற்குக்கிணங்கச் சான்றுப்படுத்தப்பட்ட ஆளணியினரினால் கப்பலில் செவ்வை பார்க்கப்படுதல் வேண்டும்: அத்துடன்

(இ) ஐந்தாண்டுகளை விஞ்சாத கால இடைவெளிகளிலான நன்னிலைப்படுத்தல், ஒழுங்கமைப்பின் விதப்புரைகளுக்கிணங்க நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(4) காற்றடிக்கப்பட்ட மீட்புப் படகுகளின் எல்லாப் பழுதுபார்த்தல்களும் பேணுகையும், உற்பத்தியாளரின் அறிவுறுத்தல் களுக்கிணங்க நிறைவேற்றப்படுதல் வேண்டும். அவசரகாலப் பழுதுபார்த்தல்கள் கப்பலில் நிறைவேற்றப்படலாம் எவ்வாறாயினும். நிரந்தரப் பழுதுபார்த்தல்கள் அங்கீகரிக்கப்பட்ட நன்னிலைப்படுத்தல்நிலையமொன்றில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(5) இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (3) இற்கிணங்க உயிர்காப்புத் தெப்பச் சேவைக்கால இடைவெளிகளின் நீடிப்பை அனுமதிக்கின்ற பணிப்பாளர் தலைமையதிபதி, சமவாயத்தின் அத்தியாயம்1 இன் 5 (ஆ) என்னும் ஒழுங்குவிதிக்கிணங்க அத்தகைய நடவடிக்கை பற்றி ஒழுங்கமைப்புக்கு அறிவித்தல்வேண்டும்.

(6) நிலைநீரிய விடுவிப்பு அலகுகள், கலஇறக்கத் துணைப்பொருட்கள் மற்றும் சுமையேற்றலின் மீது விடுவிப்பு இயக்கி என்பவற்றின் காலாகால நன்னிலைப்படுத்தல், சமவாயத்தின் அத்தியாயம் III இன் 20 ஆம் ஒழுங்குவிதியின் 9 ஆம், 11 ஆம் பந்திகளின் ஏற்பாடுகளுக்கிணங்கவிருத்தல்வேண்டும்.

(7) கப்பற்றலைவர் அல்லது கப்பற் சொந்தக்காரர்கள், ஒரு கப்பலிலுள்ள உயிர்காப்புப் படகுகள் மற்றும் மீட்புப்படகுகள், கலஇறக்கத் துணைப்பொருட்கள் மற்றும் விடுவிப்பு இயக்கி என்பவற்றின் பேணுகை, முழுமையான பரிசோதனை, தொழிற்பாடுசார் பரீட்சிப்பு, முழுப் பழுதுபார்ப்பு மற்றும் பழுதுபார்ப்பு என்பன, தீர்மானம் NSC. 402 (96) இன்ஏற்பாடுகளுக்கும் ஒழுங்கமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் வேறு வழிகாட்டு நெறிகளுக்கும் அத்துடன் சமவாயத்தின் அத்தியாயம் III இன் 20 ஆம் ஒழுங்குவிதிக்கும் இணங்க நடாத்தப்படுகின்றதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(8) இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதி 7 இல் குறிப்பீடு செய்யப்பட்ட பேணுகை, முழுமையான பரிசோதனை, தொழிற்பாடுசார் பரீட்சிப்பு, முழுப் பழுதுபார்ப்பு மற்றும் பழுதுபார்ப்பு என்பனவற்றை நிறைவேற்றுகின்ற ஆளணியினர், தீர்மானம் MSC. 402 (96) இன் தேவைப்பாடுகளுக்கும் ஒழுங்கமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் வேறு வழிகாட்டு நெறிகளுக்கும் இணங்க அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநரினால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(9) ஆளெவரும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்டாலொழிய, உப ஒழுங்குவிதி (8) இல் விதித் துரைக்கப்பட்டவாறு சேவை வழங்குநராக அவர் இலங்கையில் தொழில் கொண்டு நடாத்துதலாகாது.

(10) பணிப்பாளர் தலைமையதிபதி, இவ்வொழுங்கு விதியைப் பின்பற்றி அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநராக எவரேனும்சேவை வழங்குநரை ஏற்றங்கீகரித்தல் வேண்டும் ஆயின், அந்தச் சேவை வழங்குநர், தீர்மானம் MSC. 402 (96) இல்விதித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளையும் ஒழுங்கமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் வேறு வழிகாட்டுநெறிகளையும் நிறைவேற்றுதல் வேண்டும்.

*(11)* அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு சேவை வழங்குநருக்கும், சேவை வழங்குநரொருவரின் வெற்றிகரமான தொடக்கக் கணக்காய்வின் மேல் வழங்கப்பட்ட சேவைகளின் நோக்கெல்லையை வரையறுக்கின்ற (உ.ம். சாதனங்களின் தயாரிப்புகளும் வகைகளும்) அதிகாரவளிப்பாவணம் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்படுதல் வேண்டும்.

*(12)* பணிப்பாளர் தலைமையதிபதி, எழுத்திலான அறிவித்தல் கொடுப்பதன் மூலம், தீர்மானம் MSC. *402 (96)* இலுள்ள தேவைப்பாடுகளையும்' ஒழுங்கமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் வேறு வழிகாட்டு நெறிகளையும் பேணாத சேவை வழங்குநர்களின் அதிகாரவளிப்பை மீளப்பெறுதல் வேண்டும்.

*(13)* வேறு ஒப்பந்தஞ் செய்யும் அரசாங்கங்களினால் அல்லது அங்கீகரிக்கப்படும் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்புகளினால் அதிகாரமளிக்கப்பட்ட சேவை வழங்குநர்களைப் பணிப்பாளர் தலைமையதிபதி ஏற்றுக்கொள்ளலாம் அல்லது ஏற்றங்கீகரிக்கலாம்.

*(14)* பணிப்பாளர் தலைமையதிபதி, அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநர்கள் தொடர்பான தகவல் கிடைக்கக்கூடியதாக் கப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

## பாகம் IV

## அவசரகாலப் பயிற்சியும் முறைப் பயிற்சிகளும்

*11. (1)* குறித்தளிக்கப்பட்ட அவசரகாலக் கடமைகளுடன் கப்பலொன்றிலுள்ள ஒவ்வொரு கப்பற்றொகுதியுறுப்பினரும், கடற்பயணம் ஆரம்பிக்கு முன்னர் அத்தகைய கடமைகளுடன் பரிச்சயமாகவிருத்தல் வேண்டும்.

*(2)* கப்பலில் காப்பு நிறுவுகைகள், செயல்முறைத் திரளணிகள் என்பவற்றுடனான பரிச்சயமும், மற்றும் கப்பலில் பன்முறைப் பயிற்சிகள் மற்றும் பயிற்சியை நடாத்துதலும், அறிவுறுத்தல்களை விடுத்தலும், சமவாயத்தின் அத்தியாயம் III இன் *19* ஆம், *30* ஆம் ஒழுங்குவிதிகளுக்கிணங்க நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

*(3)* சமவாயத்தின் அத்தியாயம் III இன் *35* ஆம் ஒழுங்குவிதியின் *3* ஆம் பந்தியின் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுகின்ற பயிற்சிக் கைந்நூலொன்று ஒவ்வொரு கப்பற்றொகுதியினர் உணவறையிலும் பொழுதுபோக்கு அறையிலும் அல்லது ஒவ்வொரு சிற்றறையிலும் வழங்கப்படுதல் வேண்டும்.

*(4)* சமவாயத்தின் அத்தியாயம் III இன் *37* ஆம் ஒழுங்குவிதிக்கு இணங்கியொழுகுகின்ற திரளணி நிரலும் அவசரகால அறிவுறுத்தல்களும் ஒவ்வொரு கப்பலிலும் இருத்தல் வேண்டும்.

*(5)* திரளணிகள் நடைபெறும் திகதி, கைவிடப்பட்ட கப்பலினதும் பன்முறைப் பயிற்சிகளின தும் தீயணைப்புப் பயிற்சிகளினதும் விபரங்கள், அடைக்கப்பட்ட இடத்தினுள் பிரவேசித்தலும் மீட்புப்பயிற்சிகளும், வேறு உயிர்காப்புத் துணைப்பொருட்கள் பற்றிய பயிற்சிகளும், கப்பலிலான பயிற்சியும், பணிப்பாளர் தலைமையதிபதியினால் விதித்துரைக்கப்பட்ட இலங்கைக் கப்பலொன்றிலுள்ள அலுவலக முறையான பேரேட்டில் அல்லது கப்பலானது எந்த அரசின் கொடியைப் பறக்கவிடுகின்றதோ அந்த அரசினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பேரேட்டில் பதியப்படுதல் வேண்டும். முழுமையான திரளணி, பன்முறைப் பயிற்சி அல்லது பயிற்சித் தொடர் நியமிக்கப்பட்ட நேரத்தில் நடாத்தப்படாவிடின் நடைபெற்ற திரளணி, பன்முறைப் பயிற்சி அல்லது பயிற்சியின் சூழ்நிலைகளையும் அளவையும் குறிப்பிட்டு பேரேட்டில் பதிவீடொன்று செய்யப்படுதல் வேண்டும்.

## பாகம் V

## பொது ஏற்பாடுகள்

*12. (1)* உயிர்காப்புத் துணைப்பொருட்களும் ஒழுங்கேற்பாடுகளும் சமவாயத்தின் அத்தியாயம் III இன் பாகம் ஆ வில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளிலிருந்து விலகலாம். ஆயின், மாற்று வடிவமைப்பும் ஒழுங்கேற்பாடுகளும், சம்பந்தப்பட்ட தேவைப்பாடுகளின் உட்கருத்தை எதிர்கொள்ள வேண்டுமென்பதுடன் சமவாயத்தின் அத்தியாயம் III இற்குச் சமமான காப்பு மட்டத்தை வழங்குதலும் வேண்டும்.

*(2)* மாற்று வடிவமைப்பு அல்லது ஒழுங்கேற்பாடுகள், சமவாயத்தின் அத்தியாயம் III இன் பாகம் ஆ வின்விதித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளிலிருந்து விலகினால், அவ்வடிவமைப்பினதும் ஒழுங்கேற்பாடுகளினதும் பொறியியற் பகுப்பாய்வும், மதிப்பீடும், அங்கீகாரமும், சமவாயத்தின் அத்தியாயம் III இன் *38* ஆம் ஒழுங்குவிதிக்கிணங்க நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

13. நிருவாகத்தின் திருப்திக்குச் சமவாயத்தின் அத்தியாயம் III இல் குறிப்பீடுகள் செய்யப்படும் விடயத்தில், அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு இவ்வொழுங்கு விதிகளில் குறிப்பீடுகள் செய்யப்படும் விடயத்தில், மற்றும் நடைமுறைப்படுத்தல் நியமங்களினூடாகப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அத்தகைய குறிப்பீடுகளுக்கான நேரடிப்பொருள்கோடலெதுவும் வழங்கப்படாத விடயத்தில், வகுப்பாக்கற் சங்கங்களின் சர்வதேசக் கழகத்தின் ஒன்றிணைந்த பொருள்கோடல்கள் பணிப்பாளர் தலைமையதிபதியின் பொருள்கோடலாகக் கருதப்படுதல் வேண்டும்.

14. இலங்கையில் ஏதேனும் துறைமுகத்தில் அல்லது இடத்தில் இருக்கின்ற ஏதேனும் கப்பல், அத்தகைய கப்பலின்உடற்கோப்பு, சாதனங்கள், எந்திரத்தொகுதி, குறைவான ஆளமர்த்துகை, மிகைச்சுமையேற்றல்அல்லது முறையற்ற சுமையேற்றல் அல்லது சமவாயத்துக்கு ஒத்ததாகவிராத வேறேதேனும் நிபந்தனை காரணமாகக் காப்பற்ற கப்பலொன்றாகக் காணப்பட்டு. அத்தகைய கப்பல் எந்தச் சேவைக்காக உட்கருதப்படுகின்றதோ அந்தச் சேவையின் தன்மையைக்கருத்திற்கொண்டு மனித உயிருக்குப் பாரிய சேதம் விளைவிக்காமல் கடலுக்குச் செல்வதற்குத் தகுதியற்றதாகவிருக்குமிடத்து, அத்தகைய கப்பல் ஆய்வு செய்யப்படும் அல்லது குறைபாடுள்ள நிலைமையை நிவர்த்தி செய்யும் நோக்கத்துக்காகத் தற்காலிகமாகத் தடுத்து வைக்கப்படலாம்.

15. சமவாயத்தின் அத்தியாயம் III இலுள்ள அடிக்குறிப்புகளும் அத்தகைய அடிக்குறிப்புகளினால் குறிப்பீடு செய்யப்பட்ட தீர்மானங்களும், சுற்றறிக்கைகளும் அல்லது ஆவணங்களும் இவ்வொழுங்குவிதிகளின் பாகமொன்றாகக் கருதப்படுதல்வேண்டும்.

16. பணிப்பாளர் தலைமையதிபதி, அமைச்சரின் ஒருப்பாட்டுடன், இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை நடைமுறைப் படுத்துவதற்காகத் தேவைப்படக்கூடியவாறாகச் சமவாயத்தின் அல்லது 1988 ஆம் ஆண்டின் வரைவாவணத்தின் ஏற்பாடுகளினது குறைந்த பட்சத் தொழினுட்ப நியமங்களுக்கு இணங்கியொழுகுவதற்கான அத்தகைய நடைமுறைப்படுத்தல் நியமங்களை வழங்கலாம்.

17. இவ்வொழுங்குவிதிகளில்

''சமவாயம்'' என்பது, 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான சர்வதேசச் சமவாயம், காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் வரைவாவணம் மற்றும் அத்தகைய வரைவாவணத்துக்குச் செய்யப்பட்ட ஏதேனும் அடுத்துப்பின்னரான திருத்தம் என்று பொருளாகும்;

''கல இறக்கத் துணைப்பொருள் அல்லது ஒழுங்கேற்பாடு'' என்பது, ஓர் உய்வு மரக்கலத்தை அல்லது மீட்புப் படகை அதன் செருகிவைக்கப்பட்ட நிலையிலிருந்து காப்பான முறையில் நீரினுள் செலுத்துதல் என்று பொருளாகும்;

''உயிர்காப்புத் துணைப்பொருள் சட்டக்கோவை'' என்பது, ஒழுங்கமைப்பினால் திருத்தப்படக்கூடியவாறு, ஒழுங்குவிதி MSC. 18 (66) இன் மூலம் ஒழுங்கமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச உயிர்காப்புத் துணைப்பொருள் சட்டக்கோவை என்று பொருளாகும்;

''கடல்சார் வெளியேற்றல் முறைமை'' என்பது, ஒரு கப்பலின் கலத்தேற்ற மேற்றளத்திலிருந்து ஒரு மிதக்கும் உய்வு மரக்கலத்துக்கு ஆட்களை வேகமாக மாற்றுவதற்கான துணைப்பொருள் என்று பொருளாகும்;

''புதிய உயிர்காப்புத் துணைப்பொருள் அல்லது ஒழுங்கேற்பாடு'' என்பது, சமவாயத்தின் அத்தியாயம் III இன் ஏற்பாடுகளினால் அல்லது உயிர்காப்புத் துணைப்பொருள் சட்டக்கோவையினால் முழுமையாக மேவப்படாத புதிய சிறப்புக் கூறுகளை கொண்டுள்ள ஆனால் காப்பின் சமமான அல்லது உயர்வான தரத்தை வழங்குகின்ற உயிர்காப்புத்துணைப்பொருள் அல்லது ஒழுங்கேற்பாடு என்று பொருளாகும்;

''ஒழுங்கமைப்பு'' என்பது, சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்பு என்று பொருளாகும்;

''பயணிக்கப்பல்'' என்பது, பன்னிரெண்டு பயணிகளுக்கு மேற்பட்டோரை ஏற்றிச்செல்கின்ற ஒரு கப்பல் என்று பொருளாகும்;

''ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பு'' என்பது, ஒழுங்கமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்புகளுக்கான சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்கிணங்க ஏற்றங்கீகரிக்கப்பட்டுள்ள ஓர் ஒழுங்கமைப்பு என்று பொருளாகும்;

''மீட்புப் படகு'' என்பது, இடர்ப்பாட்டிலுள்ள ஆட்களை மீட்பதற்கும் உய்வு மரக்கலங்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் வடிவமைக்கப்பட்ட ஒரு படகு என்று பொருளாகும்.

EOG 01 - 0244

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.